Judicial Form No.53

(See Rule 42)

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Cr.P.C)

**IN THE COURT OF I ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT, CUDDALORE**

**Sessions** **Case No. 356 of 2022**

Deposition of ....... witness for ................. Prosecution........**P.W.7**
Defence
Court

| | |
|---|---|
| Name | ரவிச்சந்திரன் |
| Father's name | ஆதிமூலம் |
| Village | |
| Taluk | |
| Caste | |
| Calling | |
| Religion | |
| Age | 23 |

Solemnly affirmed in accordance with the Provisions of the Oaths Act 1969 ( Central Act 44 of 1969) on **Monday the 22nd day of January 2024.**

(S.PRAKASH) Signature of the witness.

NAME OF THE JUDGE :

Solemnly affirmed in accordance with the Provisions of the Oaths Act 1969 ( Central Act 44 of 1969) on **Monday the 22nd day of January 2024.**

SIGNATURE OF THE JUDGE.

எதிரிகள் ஆஜர்.

**முதல்விசாரணை**

1. நான் பண்ருட்டி வட்டம், புதுப்பாளையம் கிராமத்தில் குடியிருந்து, டிராக்டர் ஓட்டி தொழில் செய்து வருகின்றேன். முதல் எதிரி நதியாவை தெரியும். அவர் எங்கள் ஊரை சார்ந்தவர்.

கடந்த 19.09.2021 அன்று நான் வெளியூரில் டிராக்டர் ஓட்டி விட்டு எங்கள் ஊரை நோக்கி வந்துக்கொண்டிருந்தேன். அப்போது காலை ஐந்து மணி இருக்கும். அப்போது போலிசார் ஜீப்பில் பஸ் ஸ்டாப்பில் இருந்து சிமெண்ட் ரோடு செல்லும் இடத்தில் நின்று, நதியா வீடு எங்கிருக்கிறது தெரியுமா என கேட்டார்கள். நான் அவர் வீடு இருக்கும் இடத்தை பற்றி சொன்னேன். அதன்பிறகு பஸ் ஸ்டாப்பிலிருந்து முதல் எதிரி நதியா வீட்டிற்கு செல்லும் இடம் தொடர்பாக பஸ் ஸ்டாப்பில் வைத்து படம் வரைந்தார்கள். வேறு ஏதோ விவரங்களையும் எழுதிக்கொண்டார்கள். அதற்காக என்னிடம் சாட்சி கையெழுத்து கேட்டார்கள். நான் சாட்சி கையெழுத்து போட்டுக்கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள 2 வது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். முதல் சாட்சி கையொப்பம் முதல்எதிரி நதியாவின் வீட்டு பக்கத்தில் இருக்கும் ரமேஷ் என்பவரின் கையொப்பம் ஆகும். **நான் கையொப்பமிட்ட பார்வை மகசர் அதசாஆ 5 ஆகும்**. அதன்பிறகு அங்கிருந்து சில ஆயுதங்களை போலிசார் எடுத்தார்கள். அதற்காகவும் என்னிடம் சாட்சி கையொப்பம் வாங்கினார்கள். அவை என்ன ஆயுதம் என்று எனக்கு தெரியாது. கைப்பற்றுதல் மகசரில் உள்ள 2 வது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். முதல் சாட்சி கையொப்பம் முதல்எதிரி நதியாவின் வீட்டு பக்கத்தில் இருக்கும் ரமேஷ் என்பவரின் கையொப்பம் ஆகும். **கைப்பற்றுதல் மகசரில் உள்ள எனது கையொப்பம் அதசாஆ 6 ஆகும்**. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**(இந்நிலையில், சாட்சியை கைப்பற்றுதல் மகசர் தொடர்பாக கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர், பிறழ் சாட்சியாக அறிவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரினார். குறுக்குவிசாரணை செய்ய அனுமதி அளிக்கப்பட்டு, அரசு தரப்பில் சாட்சி குறுக்குவிசாரணை செய்யப்படுகிறார்).**

<u>அரசுதரப்பில் குறுக்குவிசாரணை</u>

**2.** போலிஸ் விசாரணையில் நான், மேற்படி தேதியில் நானும் ரமேஷும் முதல் எதிரி நதியா வீட்டிலிருந்து கைப்பற்றுதல் மகசரில் கண்டுள்ள ஆயுதங்களையும், வழக்கு தடயங்களையும் போலிசார் கைப்பற்றியபோது, உடனிருந்து சாட்சிகளாக கையொப்பம் செய்துவிட்டு, தற்போது அந்த

வழக்கு சொத்துக்கள் மற்றும் தடயங்கள் தொடர்பான விஷயங்கள் தெரியாது என தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

<u>முதல் எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை</u>

3. ஏதுமில்லை என கற்றறிந்த வழக்கறிஞர் தெரிவித்தார். அவ்விவரம் பதிவு செய்யப்பட்டது.

<u>2 வது எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை</u>

4. ஏதுமில்லை என கற்றறிந்த வழக்கறிஞர் தெரிவித்தார். அவ்விவரம் பதிவு செய்யப்பட்டது.

<u>மறுவிசாரணை</u> இல்லை.

*Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him/ her to be Correct.*
*Sd/-S.Prakash*
*I Additional District Judge*
*Cuddalore.*

Judicial Form No.53

(See Rule 42)

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Cr.P.C)

**IN THE COURT OF I ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT, CUDDALORE**

**Sessions** **Case No. 356 of 2022**

Deposition of ....... witness for .................. Prosecution........**P.W.8**
Defence
Court

| | |
|---|---|
| Name | மதுவர்த்தனா |
| Father's name | துளசிதாஸ் |
| Village | |
| Taluk | |
| Caste | |
| Calling | மருத்துவர் |
| Religion | |
| Age | 39 |

Solemnly affirmed in accordance with the Provisions of the Oaths Act 1969 ( Central Act 44 of 1969) on **Monday the 22nd day of January 2024.**

(S.PRAKASH) Signature of the witness.

NAME OF THE JUDGE :

Solemnly affirmed in accordance with the Provisions of the Oaths Act 1969 ( Central Act 44 of 1969) on **Monday the 22nd day of January 2024.**

SIGNATURE OF THE JUDGE.

எதிரிகள் ஆஜர்.

**முதல்விசாரணை**

1. நான் தற்போது அரசு விழுப்புரம் மருத்துவகல்லூரி மருத்துவமனையில் சட்டம் சார்ந்த மருத்துவ துறையில், முதுநிலை உதவி பேராசிரியராக பணியாற்றி வருகின்றேன். நான்

அதே பணியிலிருந்தபோது, கடந்த 19.09.2021 அன்று, காடாம்புலியூர் காவல்நிலைய குற்ற எண் 561/2021 என்ற குற்ற வழக்கில் சம்மந்தப்பட்ட இறந்த நபர், ஜெகதீசன் வயது 40, த-பெ. பன்னீர்செல்வம், என்பவரது பிரேதத்தை சடலக்கூராய்வு செய்து, இறப்பு தொடர்பான காரணம் குறித்து கருத்துரை வழங்குமாறு, பண்ருட்டி வட்ட பயிற்சி காவல்துணை கண்காணிப்பாளர் அவர்கள் கொடுத்த வேண்டுகோள் விண்ணப்பத்தினை தலைமைகாவலர் எண்.2101 திரு.ராசு என்பவர் மூலம் பெற்றுக்கொண்டு, சடலக்கூராய்வு 19.09.2021 அன்று மதியம் 02.30 மணி அளவில் தொடங்கினேன். மேற்படி பிரேதத்தின் மீது பிண விரைப்பு தன்மை உடலின் அடிப்பாகத்தில் மட்டும் காணப்பட்டது. உடலின் மீது காணப்பட்ட அங்க மச்ச அடையாளங்கள்

1. வலது கால் முட்டியில் ஒரு பழைய காய வடு

2. வலது கணுக்காலில் ஒரு பழைய காய வடு

2. மேற்படி உடலின் நீளம் 169 செ மீ ஆகவும், அகலம் 42 செ மீ ஆகவும், தலைமுடி 5 செ மீ ஆகவும், கருப்பு நிறத்திலும் காணப்பட்டது. வாய் மற்றும் கண்கள் மூடிய நிலையிலும், விரல் நகங்கள் நீல நிறத்திலும் காணப்பட்டது. சடலத்தின் மீது கீழ்க்கண்ட காயங்கள் காணப்பட்டன.

1. சடலத்தில் நான்கு கிழிந்த காயங்கள் வெவ்வேறு அளவில் காணப்பட்டன அவை பின்வருமாறு

(a) சுமார் 4 செ மீ நீளம் 2 செ மீ அகலம், 0.5 செ மீ ஆழம் நெற்றியின் நடுப்பகுதியில் காணப்பட்டது

(b) 8 செ மீ நீளம், 2 செ மீ அகலம் 0.5 செ மீ ஆழம் நெற்றியின் நடுப்பகுதியில், முந்தைய காயத்திலிருந்து 2 செ மீ கீழ்புறமாக தள்ளி காணப்பட்டது.

(c) 7 செ மீ நீளம், 2 செ மீ அகலம், 0.5 செ மீ ஆழம் , நெற்றியின்நடுபகுதியில் முந்தைய காயத்திலிருந்து 1 செ மீ தள்ளி கீழ்புறத்தில் காணப்பட்டது.

(d) 4 செ மீநீளம், 2 செ மீ அகலம், 0.5 ஆழம், வலது கண் புருவத்தின் மேல் காணப்பட்டது, அதன் அடிப்பகுதியில் மண்டையோடு உடைந்த வண்ணமும், வெளியில் தெரிந்தவண்ணமும் காணப்பட்டது.

மேற்கூறிய காயங்கள் அனைத்தும் ஒழுங்கற்ற முனைகளுடனும், அடர் சிவப்பு நிறத்திலும், கன்றிய முனைகளுடனும் காணப்பட்டன.

2. <u>சடலத்தின் மீது மூன்று வெட்டுக்காயங்கள் வெவ்வேறு அளவில் காணப்பட்டன அவை பின்வருமாறு</u>

(a) 3 செ மீ நீளம் 2 செ மீ அகலம், தசை அளவு ஆழம் கொண்ட காயமானது வலது காதின் முன்புறத்தில் காணப்பட்டது

(b) 2 செ மீ நீளம், 2 செ மீ அகலம், தசை அளவு ஆழமும் கொண்ட காயம் முந்தைய காயத்திலிருந்து 3 செ மீ பின்புறமாக தள்ளி வலது காதின் முன்பகுதியில் காணப்பட்டது.

(c) 5 செ மீ நீளம், 2 செ மீ அகலம், தசை அளவு ஆழமும் கொண்ட காயமானது, வலது கன்னத்தின் காணப்பட்டது.

மேற்கூறிய காயங்களின் முனைகள் சீராகவும், அடர்சிவப்பு நிறத்திலும் காணப்பட்டன.

3. <u>சடலத்தின் மீது மூன்று கன்றிய காயங்கள் வெவ்வேறு அளவில் காணப்பட்டன அவை பின்வருமாறு</u>

(a) சுமார் 17 செ மீ நீளமும் 3 செ மீ அகலம் 0.5 செ மீ ஆழமும் கொண்ட காயம் கழு த்தின் முன்புறத்தில் காணப்பட்டது.

(b) 3 செ மீ நீளமும், 1 செ மீ அகலமும், 0.5 செ மீ ஆழமும் கொண்ட காயம், வலது கை மணிக்கட்டில் காணப்பட்டது.

(c) 5 செ மீ நீளமும், 3 செ மீ அகலமும், 0.5 செ மீ ஆழமும் கொண்ட காயம், வலது முழங்கையில் காணப்பட்டது.

மேற்கூறிய காயங்கள் அனைத்தும், அடர்சிவப்பு நிறத்தில் காணப்பட்டன.

<u>சடலத்தை உள்கூராய்வு செய்ததில் கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன.</u>

1. தலையில் முடித்தோலில் சுமார் 16 செ மீ நீளமும், 12 செ மீ அகலமும் 0.5 செ மீ ஆழமும் கொண்ட கன்றிய காயமானது முன்பகுதியின் நடுப்புறத்திலும், வலது பக்கவாட்டிலும் காணப்பட்டது.

2. மண்டையோடு மற்றும் மூளை உறை இயல்பான நிலையில் காணப்பட்டது. மூளையின் மேற்பகுதியில் முழுவதும் ரத்தக்கட்டுக்கள் காணப்பட்டன. மண்டையோட்டின் அடிப்பகுதி இயல்பான நிலையில் காணப்பட்டது.

3. கழுத்துப்பகுதியில் நாவடி மற்றும் குரல்வளை எலும்புகள், அதனை சுற்றியுள்ள தசைகள் மூச்சுகுழாய் மற்றும் உணவுக்குழாய் இயல்பான நிலையிலும், அந்நிய பொருட்கள் ஏதும் இல்லாமலும் காணப்பட்டது.

4. மார்பில் நெஞ்சுக்கூடு மற்றும் விலா எலும்புகள் இயல்பான நிலையிலும், நுரையீரல் மற்றும் இருதயம் மற்றும் அதனை சுற்றியுள்ள தமனிகள் இயல்பான நிலையிலும் காணப்பட்டன. இருதயத்தின் அறைகளில் ரத்தம் ஏதும் இல்லாமல் காணப்பட்டது.

5. வயிற்றில் சுமார் 300 கிராம் அளவிலான பாதி செரித்த நிலையிலான உணவு பொருளானது காணப்பட்டது. அதில் வாடை ஏதும் தென்படவில்லை. மற்ற உடல் உள் உறுப்புகள் அனைத்தும் இயல்பான நிலையிலும், அதன் வெட்டு தோற்றத்தில் ரத்தம் தோய்ந்த நிலையிலும் காணப்பட்டன.

6. இடுப்பெலும்புகள் மற்றும் தண்டுவடம் இயல்பான நிலையில் காணப்பட்டன.

3. மேற்படி சடலக்கூராய்வினை அன்றைய தினம் பிற்பகல் 03.30 மணிக்கு நான் முடித்தேன். சடலத்தின் மீது காணப்பட்ட காயங்கள் அனைத்தும் இறப்பிற்கு முன்பாகவே ஏற்பட்ட காயங்கள். மேற்படி சடலக்கூராய்வின்போது சேகரம் செய்யப்பட்ட உடல் உள் உறுப்புகள் ரசாயன பரிசோதனைக்காக வட்டார தடய அறிவியல் ஆய்வகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டன. மேற்படி உடலிலிருந்து ரத்தம் சேகரம் செய்யப்பட்ட ரத்தம்தோய்ந்த பஞ்சானது, ரத்தவகை அறியும்பொருட்டு, அனுப்பி வைக்கப்பட்டது.

4. தடய அறிவியல் ஆய்வகத்தின் அறிக்கைகள் பெறப்பட்டு, அவைகளை ஆய்வு செய்ததில், உடல் உள் உறுப்புகளில் எத்தில்ஆல்கஹால் இருந்தது கண்டறியப்பட்டுள்ளது. அது குறித்த விவரங்கள் தடய அறிவியல் அறிக்கையில் விரிவாக விளக்கப்பட்டுள்ளது. விழுப்புரம் வட்டார தடய **அறிவியல் ஆய்வகம் வழங்கிய 28.09.2021 தேதியிட்ட VPM/Tox-H /1438/2021 அறிக்கை அதசாஆ 7 ஆகும்**. அவ்வறிக்கையின்படி உடல் உறுப்புகளில் எத்தில்ஆல்கஹால் இருப்பது கண்டறியப்பட்டது, வேறு எந்த நச்சுதன்மையுடன் கூடிய பொருட்களோ கண்டறியப்படவில்லை. **சடலக்கூராய்வின்போது சேகரம் செய்யப்பட்ட ரத்தம்தோய்ந்த பஞ்சு, சென்னை தடய அறிவியல் ஆய்வகத்திற்கு குருதி வடிநீரியல் ஆய்வுக்காக**

**அனுப்பிவைக்கப்பட்டு அந்த அறிக்கை VPM/Biol/427/2021 dt. 23.09.2021 மூலம் அனுப்பப்பட்டது. அவ்வறிக்கை அதசாஆ 8 ஆகும். நான் வழங்கிய சடலக்கூராய்வு அறிக்கை அதசாஆ 9 ஆகும். மேற்படி ஆய்வறிக்கைகளை பரிசீலனை செய்து, அதனடிப்படையில் மேற்படி இறந்த நபர், அவருக்கு தலையில் ஏற்பட்டிருந்த காயங்களின் விளைவினால் இறந்திருக்கக்கூடும் என கருத்து தெரிவித்து நான்இறுதி கருத்துரை வழங்கினேன், அந்த இறுதி கருத்துரை அதசாஆ 10 ஆகும்.** நான் அதசாஆ 9 ல் சடலக்கூராய்வு அறிக்கையில் சான்றளித்துள்ள கிழிந்த காயங்கள் கனமான கூர்மழுங்கிய ஆயுதங்களை கொண்டு தாக்கும்போது ஏற்படும். நான் சான்றளித்துள்ள 2 வது காய வகைகள் (cut injuries) , கூரான முனைகளை கொண்ட ஆயுதங்களை கொண்டு தாக்கும்போது ஏற்படும். நான் சான்றளித்துள்ள 3 வது காய வகைகள்( contusion injuries) கனமான விசையுடன் தாக்கும்போது ஏற்படும். சடலக்கூராய்விற்கு முன்பு, 24 மணி நேரத்திலிருந்து 36 மணி நேரத்திற்குள் சம்மந்தப்பட்ட நபர் இறந்திருக்கக்கூடும். சடலத்தின் காணப்பட்ட விரைப்பு தன்மையின் அடிப்படையில் இம்முடிவினை நான் மேற்கொண்டேன். இறந்துபோன நபர் அருந்தியிருந்த மதுவின் காரணமாக அவருக்கு மரணம் சம்பவிக்கவில்லை. மரணத்திற்கான காரணம் பற்றி எனது கருத்துரையில் விரிவாக குறிப்பிட்டுள்ளேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>2 ம் எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை</u>

5. நான் சடலக்கூராய்வு தொடர்பாக வழங்கியுள்ள அதசாஆ 9 மற்றும் அதசாஆ 10 ஆவணங்களில், இறப்பின் நேரம் குறித்து, குறிப்பிட்டு time since death என குறிப்பிடவில்லை என்றால் சரிதான். சடலத்தின் மீது உட்கூராய்வு செய்ததில், அவர் வயிற்று பகுதியில் பாதி செரிமானம் ஆன உணவுபொருட்கள், எவ்வித மனமும் இன்றி உள்ளதாக நான் குறிப்பிட்டுள்ளதால், பகல் ஒருமணிக்கு இறந்துபோன நபர் உணவருந்தி இருக்க வாய்ப்பு உள்ளது என்றால், அவ்வாறு குறிப்பிட்டு கூற இயலாது. ஏனெனில், சம்மந்தப்பட்ட நபரின் செரிமான தன்மை, அவர் உட்கொண்ட உணவின் தன்மை, அவரின் வயது, அவர் உட்கொண்ட உணவின் அளவு, அந்த உணவுடன் கலக்கப்பட்ட பொருட்களின் தன்மை ஆகியவற்றை பொறுத்து

உணவின் செரிமான தன்மை இருக்கும். நான் கூறிய பதில், எனது பொதுவான கருத்து என்றால், இல்லை, அறிவியல் ரீதியான கருத்துரை ஆகும். இறந்துபோன நபருக்கு 40 வயது என்றால் சரிதான். 40 வயதில் உள்ள ஒரு ஆண் நபருக்கு செரிமான தன்மை சீராக இருக்க வாய்ப்பு உள்ளது என்றால் வாய்ப்பு உள்ளது, ஒவ்வொரு நபரை பொறுத்து செரிமான தன்மை மாறுபடும். அதசாஆ 9 சடலக்கூராய்வு அறிக்கையில், நான் கண்டறிந்த வயிற்றில் உள்ள உணவின் தன்மையை பற்றி குறிப்பிடவில்லை என்றால் சரிதான். பகுதி செரிமானம் கொண்ட உணவு என குறிப்பிட்டுள்ளேன். இறந்துபோன நபர் மதியம் ஒருமணிக்கு உணவருந்தியிருக்க வாய்ப்பு உ ள்ளது என்றால் அதுபற்றி நான் கருத்து கூற முடியாது. இறந்துபோன நபர் மதியம் ஒன்றரை மணிக்கு சாப்பிட்டிருக்க வாய்ப்பு உள்ளதா என்றால், அதுபற்றியும் நான் கருத்து கூற முடியாது. இறந்துபோன நபர் எப்போது சாப்பிட்டார் என குறிப்பாக கூற இயலாது, ஆனால், இறப்பதற்கு சுமார் ஒன்றரை மணி நேரத்திலிருந்து இரண்டு மணி நேரத்திற்கு முன்பு அவர் உணவருந்தியிருக்க வாய்ப்பு உள்ளது. இறந்துபோன நபர் மதியம் ஒன்றரை மணிக்கு உணவருந்தியிருந்தால், மாலை நான்கு மணிக்கு இறந்திருக்கக்கூடும் என்றால், உணவு உண்ட நேரம் பற்றி தெரியாமல் நான் கருத்து கூற முடியாது. நான் கூறிய கால இடைவெளிக்கு வாய்ப்பு உள்ளது. இறந்துபோன நபர் மதியம் ஒரு மணிக்கோ அல்லது ஒன்றரை மணிக்கோ உணவருந்தியிருக்கும் நிலையில், நான் கருத்துரையில் கூறியதுபோன்று, பகுதி அளவு செரிமானமான உணவு வயிற்றில் இருந்ததால், மாலை நான்கு மணிக்கு அந்த நபர் இறந்திருக்க வாய்ப்பு உள்ளது என்றால், நேரத்தை குறிப்பிட்டு நான் சாட்சியம் அளிக்க இயலாது, ஆனால் உணவருந்திய பிறகு ஒன்றரை மணியிலிருந்து இரண்டு மணி நேரத்திற்கு பிறகு அவர் இறந்திருக்கலாம். அதனால் தான், பகுதியளவு செரிமான உணவு அவர் வயிற்றில் காணப்பட்டது. இறந்துபோன நபர் அளவுக்கு அதிகமாக மது அருந்தியிருக்கிறார் என்றால் ஆமாம். வழக்கமாக ஒரு நபர் மது அருந்தினால், உடனடியாக சாப்பிடவேண்டும் என்று தோன்றும் என்றால், வாய்ப்பு இருக்கலாம், நபரைபொறுத்து இந்த கருத்துரை மாறுபடும்.

6. நான் எனது சான்றிதழில் குறிப்பிட்டுள்ள கிழிந்த காயங்கள், ஒரு நபர் அதிகளவில் மது அருந்திவிட்டு, மோட்டார் சைக்கிளை ஓட்டி, தலைக்குப்புற விழும் நிகழ்வில்,

குறிப்பாக நெற்றி தரையில் பட விழும் நிலையில் ஏற்பட வாய்ப்பு உள்ளதா என்றால் வாய்ப்பு இல்லை. எவ்வாறு நான் வாய்ப்பு இல்லை என கூறுகிறேன் என்றால், ஒரு நபர் வாகனத்தில் இருந்து விழும்போது associated injuries நிச்சயம் ஏற்படும். அவ்வாறு ஏற்படும் காயங்கள் தொடர்புடைய Surface-ன் தன்மைக்கு ஏற்ப மாறுபடும் என்றால் மாறுபடும். ஒரு நபர் தரையில் விழுகின்ற நிகழ்வில் அந்த இடத்தின் தன்மைக்கு ஏற்ப காயத்தின் தன்மையும் மாறுபடும் என்றால் சரிதான். பொதுவாக நான் சான்றளித்துள்ள கன்றிய காயங்கள் வாகனத்தில் இருந்து நிகழ்வில் ஏற்பட வாய்ப்பு உள்ளது என்றால் வாய்ப்பு இல்லை. அவ்வாறு விழுகின்ற சமயத்தில் ஒரு குச்சியோ அல்லது கல்லோ இருந்தால் கழுத்து பகுதியில் கன்றிய காயம் ஏற்படும் என்றால் சரியல்ல. நான் பதிவு செய்துள்ள தன்மையுடன் கூடிய கன்றிய காயம், மேற்படியாக கூறுகின்ற நிகழ்வில் ஏற்பட வாய்ப்பு இல்லை. கன்றிய காயங்களில் (b) மற்றும் (c) ஆகியவை ஒரு நபர் கீழே விழும் நிகழ்வில் ஏற்பட வாய்ப்பு உள்ளதா என்றால் வாய்ப்பு உள்ளது.

முதல் எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை

7. மேற்படி 2 வது எதிரி தரப்பு குறுக்குவிசாரணையை ஏற்றுக்கொள்வதாக கற்றறிந்த வழக்கறிஞர் தெரிவித்தார். அவ்விவரம் பதிவு செய்யப்பட்டது.

மறுவிசாரணை இல்லை.

*Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him/ her to be Correct.*
*Sd/-S.Prakash*
*I Additional District Judge*
*Cuddalore.*